**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 05.11.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகம் சர்வதேச முன்னோடி பல்கலைகழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இந்திய அளவில் சிறந்த மற்றும் முன்னோடி பல்கலைக்கழகமாக இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தால் 2021 ஆண்டு தேர்வு செய்யப்பட்டது. வேளாண் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க துறையில் மேலும் மேம்பட பல தொலைநோக்கு திட்டங்களை பல்கலைக்கழக துணைவேந்தர், முனைவர். வெ. கீதாலட்சுமி அவர்கள் அரசு மற்றும் பன்னாட்டு நிறுவங்களின் ஒத்துழைப்போடு செயல்படுத்தி வருகிறார். பிரசித்தி பெற்ற உலக உணவு விருது வழங்கும் அமைப்பானது, கடந்த அக்டோபர் 19-20, 2022ல் அமெரிக்காவில் உள்ள அயோவா மாநிலத்தில் நடந்த விருது வழங்கும் நிகழ்வுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தரை கௌரவ விருந்தினராக வரவேற்றனர். மேலும் இவ்விழாவில் துணை வேந்தர் அவர்கள் நார்மன் போர்லாக் பன்னாட்டு கருத்தரங்கில் சிறப்புரை ஆற்றினார். இந்த வெளிநாட்டு பயணத்தின்போது, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண்கல்வி மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டிற்காக சர்வதேச வேளாண் ஆராய்ச்சிக்கான ஆலோசனை அமைப்பு (CGIAR) மற்றும் அமெரிக்காவிலுள்ள பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை, சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் (IFPRI) / மிச்சிகன் மற்றும் கான்சாஸ் மாநில பல்கலைக் கழகங்கள் போன்ற முன்னோடி ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு சென்று மாணவர்கள் மற்றும் பல்கலைகழக ஆசிரியர்களின் கல்வி மற்றும் ஆராய்ச்சித் திறன்களை மேம்படுத்த கூட்டு ஆராய்ச்சி திட்டங்கள், மாணவர்கள் மற்றும் விஞ்ஞானிகள் பரிமாற்றம் மூலம் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கான்சாஸ் மாநில பல்கலைக்கழகத்துடன் இணைந்து மாணவர்கள், பல்கலைகழக ஆசிரியர்களின் கல்வி மற்றும் ஆராய்ச்சி திறன்களை மேம்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

இது தவிர, இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் க்ரான்ஃபீல்ட் பல்கலைக்கழகம், ஜெர்மனியின் ப்ரான்ஷ்வீக் தொழில்நுட்ப பல்கலைக்கழகம், நெதர்லாந்திலுள்ள புவி தகவல் மற்றும் கண்காணிப்பு மையம் மற்றும் ட்வென்டே பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக்கழகங்களுக்கு சென்று தாவர அறிவியல், மண் மற்றும் நீர் பாதுகாப்பு, ட்ரோன் பயன்பாடுகள், விவசாய பயன்பாடுகளில் புவி சார்ந்த தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதல் போன்ற துறைகளில் ஆராய்ச்சியில் இணைந்து செயல்படுவதுற்கான முயற்ச்சிகள் எடுக்கப்பட்டது.

அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இளங்கலை பயிலும் மாணவர்கள் திறன் மேம்படுவதற்காக மேற் குறிப்பிட்ட அயல் நாட்டு பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் தங்கள் பயிற்சிப்படிப்பை மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. விவசாயத்தில் செயற்கைக்கோள் மற்றும் ட்ரோன் தொழில்நுட்பங்களைத் திறம்பட பயன்படுத்துவதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், புவி தகவல் மற்றும் கண்காணிப்பு மையம், ட்வென்டே பல்கலைக்கழகம் மற்றும் சென்னையை சர்வதேச ஸ்டார்ட்-அப் பார்ம்வைஸ் ஆகியவற்றுடன் முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இதற்காக, டிஜிட்டல் மேப்பிங், விவசாயத்தில் ட்ரோன் பயன்பாடுகள் மற்றும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் திறன் மேம்பாடு ஆகியவற்றில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் கிரான்ஃபீல்ட் பல்கலைக்கழகம், இங்கிலாந்து இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடுவதற்கான நடைமுறைகள் தொடங்கப்பட்டுள்ளன. துணைவேந்தரின் வெளிநாட்டு பயணத்தின் மூலம் வேளாண் பல்கலைக்கழகம் வரும் காலத்தில் பல வேளாண் திட்டங்களை பல்கலைக்கழக வளர்ச்சிக்காக பன்னாட்டு நிதி உதவியுடன் செயல்படுத்தயிருக்கிறது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**